DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No. 185/2014
****

Deposition of Witness for : DW1
Name : கருப்பசாமி
Father`s Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :
Date : 09.09.2025

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். நான் பிரதிவாதி முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். 18.11.2004 ல் வாதிக்கு ஆவுடையம்மாள் தபசில் சொத்துக்கள் மற்றும் வேறு சொத்தைப் பொறுத்து பிறப்பித்துக் கொடுத்த பதிவு உயில் ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.1 ஆகும். தபசில் சொத்திற்குரிய பட்டா அசல் பி.வா.சா.ஆ.2 ஆகும். 04.10.1993 ல் கா.ம. கண்ணப்பத்தேவர் 3ம் பிரதிவாதி பாலமுருகனுக்கு பிறப்பித்துக் கொடுத்த அடமானத்தின் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.3 ஆகும்.

21.12.2006ம் தேதியில் 1ம் பிரதிவாதி கருப்பசாமிக்கு 2ம் பிரதிவாதி மருதாத்தாள் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ. 4ஆகும். 19.12.2011ல் இந்த வாதிகளின் பெயரில் பெருமாள்தேவர் குமாரர் மருதையாத்தேவர் பிறப்பித்துக் கொடுத்த மோசடி கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ. 5 ஆகும். 26.12.2011ல் செல்லையாத்தேவர் மனைவி மருதாத்தாள் பரமாயியம்மாள் பெயரில் பிறப்பித்துக் கொடுத்த மோசடி குடும்ப ஏற்பாடு ஆவணம் அசல் பி.வா.சா.ஆ. 6ஆகும். 30.08.2012ம் தேதியில் செல்லையாத் தேவர் மனைவி மருதாத்தாள் பரமாயியம்மாள் பெயரில் பிறப்பித்துக் கொடுத்த மோசடிய குடும்ப ஏற்பாடு ரத்து ஆவணம் – அசல் பி.வா.சா.ஆ.7 ஆகும். 25.12.2012ல் புல எண்.827/1ஏக்கு வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட கணினி பட்டா அசல் பி.வா.சா.ஆ.8 ஆகும். வில்லங்க சான்றிதழ் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.9 ஆகும். கா.ம. கண்ணப்பத்தேவரின் இறப்பு சான்று பி.வா.சா.ஆ.10 ஆகும். 3,4 பிரதிவாதிகளின் தகப்பனார் க.கண்ணப்பத்தேவரின் இறப்புச்சான்று பி.வா.சா.ஆ.11 ஆகும். கண்ணப்பத்தேவர் மனைவி மருதாத்தாள் இறப்பு சான்று – நீதிமன்ற நகல் பி.வா.சா.ஆ.12 ஆகும். வாதி வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுகிறேன்.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**